**கவனிக்க.**- 2009.06.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1608 - 2009 ජුනි 26 වැනි සිකුරාදා - 2009.06.26**

*1608 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 750 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 760 |


**கவனிக்க.**- (i) தேசமான்ய ரவீந்திர வணிகசேகர ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2009, பெப்புருவரி 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) லங்கா நேச்சர் லவிங் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2009, ஏப்பிறல் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) இலங்கை சர்வதேச ஒத்துழைப்புச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2009, ஏப்பிறல் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வரராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில்´ பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, யூன் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய விவாகம் பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணபங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, யூலை மாதம் 24 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2009, மே 19.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. மாத்தறை | ஹக்மன | மீஎல்ல பிரிவின் முஸ்லிம், விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தறை |
| 2. மாத்தறை | மாத்தறை | கொட்டுவேகொட பிரிவின் முஸ்லிம், விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தறை |
| 3. மாத்தறை | திக்வெல்ல | திக்வெல்ல பிரிவின் முஸ்லிம், விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தறை |

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, யூலை மாதம் 24 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2009, மே 18.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. மாத்தறை | கொடபொல | மொறவக் கோறளை மேற்கு விவாக (பொது) மற்றும் பல்லேகம பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தறை |
| 2. மாத்தறை | கிரிந்த புகுல்வெல்ல | ககபட பத்துவ பிரிவின் விவாக (பொது) மற்றும் கிரிந்த கிழக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தறை |
| 3. மாத்தறை | திக்வெல்ல | வெல்லபட பத்துவ பிரிவின் விவாக (பொது) மற்றும் திக்வெல்ல பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தறை |
| 4. மாத்தறை | முலட்டியன | கந்தபோத பத்துவ பிரிவின் விவாக (பொது) மற்றும் ரஞ்சாகொட பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தறை |

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 5. மாத்தறை | அகுரஸ்ஸ | வெலிகம் கோறளை அகுரஸ்ஸ பிரிவின் பிரிவின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தறை |

6-470

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய விவாகம் பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆடி மாதம் 24 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2009, வைகாசி 18.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. கண்டி | உடுநுவர | புதிய எல்பிட்டிய கெலிம்பய பிரதேசத்தின் உடுநுவர, யட்டிநுவர பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கண்டி |

6-471

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, யூலை மாதம் 24 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2009, மே 18.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. கண்டி | குண்டசாலே | பாததும்பர பிரிவின் விவாக (கண்டி/பொது) மற்றும் உடகம்பக கிழக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கண்டி |
| 2. கண்டி | ஹரிஸ்பத்துவ | ஹரிஸ்பத்துவ பிரிவின் விவாக (கண்டி/பொது) மற்றும் குலுகம்மன சியபத்துவ 01 பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கண்டி |
| 3. கண்டி | உடுநுவர | மிவதுர பிரிவின் மேலதிக விவாக பதிவாளர் (கண்டி/பொது) மற்றும் உடுநுவர, யட்டிநுவர பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கண்டி |

6-472

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆடி மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2009, ஆனி 02.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. அம்பாறை | அட்டாளைச்சேனை | அட்டாளைச்சேனை பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , அம்பாறை |
| 2. அம்பாறை | சம்மாந்துறை | சம்மாந்துறை மேற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , அம்பாறை |

6-473

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய விவாகம் பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆடி மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2009, ஆனி 02.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. அம்பாறை | கல்முனை | கரவகுபத்து பிரிவின் நய்பத்திமுனை பகுதி முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , அம்பாறை. |

6-474

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய விவாகம் பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆடி மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2009, ஆனி 02.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. பதுளை | ஹல்தும்முல்ல | ஹல்தும்முல்ல பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , பதுளை |

6-475

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவராயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, ஆடி மாதம் 24 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2009, வைகாசி 27.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. புத்தளம் | சிலாபம் | சிலாபம் நகர பிரிவின் பிறப்பு, இறப்பு, வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , புத்தளம் |

6-476

---

கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சு

கரையோரம் பேணல் திணைக்களம்

**சட்ட அலுவலர் பதவிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளல்**

கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் கரையோரம் பேணல் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள சட்ட அலுவலர் பதவிக்கு இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2009.07.17 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கும் பொருட்டு ''பணிப்பாளர், கரையோரம் பேணல் திணைக்களம், 4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10'' எனும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சட்ட அலுவலர் பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடல் வேண்டும் :

(i) விண்ணப்பப்படிவங்களை மற்றும் அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை கரையோரம் பேணல் திணைக்களப் பணிப்பாளரின் அலுவலக முகவரிக்கே அனுப்புதல் வேண்டும். வேறு எந்த ஒரு அதிகாரியினதும் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்புதல் ஆகாது.

(ii) மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு மற்றும் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(iii) விண்ணப்பப்படிவம் அல்லது அது சம்பந்தமான ஆவணங்கள் தபாலில் தொலைந்தமை பற்றி செய்யப்படும் முறைப்பாடுகள் பற்றி கவனம் செலுத்தப்படமாட்டாது.

(iv) ஏற்கனவே அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்கள் தம் விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவரின் ஊடாக அவரின் விதப்புரையுடன் அனுப்புதல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்**.- அரச நிர்வாகச் சுற்றறிக்கை 6/2006 க்கு அமைய SL 1-2006 ஆரம்பநிலை ரூபா 22,935-10X645-8X790-17X1,050-53,555 ஒன்று திரட்டிய சம்பளம் உரித்துடையதாகும் :

2.1 சேர்த்துக்கொள்ளும் தரத்துக்கான சம்பளம் :
ரூபா 22,935-10X645-29,385 ஆகும்.

**குறிப்பு**.- சம்பளம் மற்றும் ஊழியர் தொகை ஆணைக்குழுவின் அவதானிப்பைப் பெற்றுக்கொண்டு பதவி உயர்த்தும் ஒழுங்கு முறைகளைத் தயாரித்து, அப்பதவியை உயர்த்தும் வரை சேர்த்துக் கொள்ளப்பட்ட தரத்துக்கான சம்பளமே வழங்கப்படும்.

3. **வயதெல்லை**.- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (தற்போது அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.)

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- சட்டத்தரணி பட்டம் அல்லது சட்டக் கல்லூரி இறுதியாண்டு பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

5. **தொழில் மற்றும் பிற தகைமைகள்**.- 3 வருடங்கள் அனுபவம் உள்ள சட்டத்தரணியாக இருத்தல்.

6. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை**.- அரச வர்த்தமானி அறிவித்தல்/ பகிரங்க தினசரி பத்திரிகை ஆகியவற்றின் அறிவித்தல் மூலம் விண்ணப்பம் கோரும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள், அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு மற்றும் புள்ளி வழங்கப்படும் திட்டமொன்றின் அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

**நேர்முகப் பரீட்சையின்போது புள்ளி வழங்கப்படும் முறை :**

| | புள்ளி | உச்ச புள்ளி |
|---|---|---|
| 1. கல்வித் தகைமை : | | 30 |
| (i) சட்டக் கல்லூரி இறுதி ஆண்டுப் பரீட்சையில் கௌரவ சித்தி பெற்றிருத்தல் | - 05 | |
| (ii) (அ) சட்டவியல் பட்டத்தின் இரண்டாவது வகுப்பில் கீழ் சித்திபெற்றிருத்தல் | - 05 | |
| (ஆ) சட்டவியல் பட்டத்தின் இரண்டாவது வகுப்பில் மேல் சித்தி பெற்றிருத்தல் | - 08 | |
| (இ) சட்டவியல் பட்டத்தில் முதலாம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் | - 10 | |
| (iii) சட்டத் துறையில் சம்பந்தப்பட்ட பட்டப்பின் பின் படிப்பு டிப்ளோமா | - 12 | |
| (iv) சட்டத் துறையில் சம்பந்தப்பட்ட பட்டப் பின் படிப்புக்கு | - 15 | |

2. சட்டத்துறையில் பெற்றுள்ள அனுபவம் சட்டத்தரணியாக 03 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியவருக்கு ஒரு வருடத் துக்கு 05 புள்ளிகள் வீதம் — 25

* வெளிவாரி விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின்போது சேவைச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். அச்சேவைச் சான்றி தழ் 10 வருடங்களுக்குக் குறை யாத சேவை அனுபவம் உள்ள நீதிமன்ற அதிகாரி ஒருவரிடம் அல்லது சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவரிடம் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

3. அரச சேவையில் சட்ட அதிகாரியாகப் பெற்றுள்ள அனுபவம் — 10

* சம்பந்தப்பட்ட திணைக்களம்/ நிறுவனத் தலைவரால் உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.

4. கரையோரம் பேணல் சட்டம் சம்பந்த மான அறிவும் விளக்கமும் — 10

(i) நிர்வாகம் - 01
(ii) கரையோர வலய முகாமைத்துவம் - 01
(iii) அனுமதிப்பத்திர ஒழுங்குவிதிகள் - 01
(iv) பொது ஒழுங்குவிதிகள் - 01
(v) கருத்து விளக்கம் - 01
(vi) கரையோரம் பேணல் சட்டத்தின் கீழ் உள்ள மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தல் ஒழுங்குவிதி சம்பந்தமான அறிவு பெற்றிருத்தல் - 05

5. ஆங்கில அறிவு சம்பந்தமான நிபுணத்துவம் (பெற்றுள்ள உயர் தகைமைக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும்) — 10

(i) விண்ணப்பதாரி தாம் பெற் றுள்ள பட்டத்தை/பட்டப்பின் படிப்பை/டிப்ளோமாவை ஆங்கில மொழி மூலம் பயின் றிருப்பின், - 10
(ii) அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் ஆங்கில மொழி சம்பந்தமான 06 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறி ஒன்றைப் பயின்றிருத்தல் - 08
(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் - 07

6. கணனி அறிவு (பெற்றுள்ள உயர் தகை மைக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும்.) — 10

(i) கணனி விஞ்ஞானத்தை பட்டப் படிப்பின் பிரதான பாடமாக பயின்றிருத்தல் - 10
(ii) ஒரு வருடத்துக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பயின்று இருத்தல் - 08
(iii) 06 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறி ஒன்றைப் பயின்றிருத்தல் - 05

7. ஆளுமையும் நேர்முகப் பரீட்சையின்போது காட்டிய திறன்கள் — 05

(i) தலைமைத்துவம்/ஆளுமையும் - 02
(ii) மொழியைக் கையாளும் திறன் - 02
(iii) நேர்முகப் பரீட்சையில் காட்டிய திறன்கள் - 01

100

**7. சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனைகள் மற்றும் நியதிகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையது. விதவைகள் அனாதைகள்/தபுதாரர் அனாதைகள் ஓய்வூதிய சம்பள நிதியத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையுள்ள பிரிவுகள் ஏற்புடையதாகும்.

(iii) நியமனம்பெற்ற திகதி முதல் 03 வருட காலத்துக்குள் 1 ஆவது தடைதிறன்காண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். சட்ட அலுவலர்கள் III ஆவது வகுப்புக்கு வந்து 05 வருடங்களுக்குள் 2 ஆவது தடை திறன்காண் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும். தடை திறன்காண் பரீட்சை ஒரு எழுத்துமூலமான பரீட்சையாகும். இது கரையோரம் பேணல் திணைக்களத்தினால் நடத்தப்படும்.

* முதலாவது தடை திறன்காண் பரீட்சை, அலுவலக நிர்வாகம் மற்றும் தாபனக்கோவை ஆகிய விடயங்களைக் கொண்டதாகும். இது 2 மணித்தியா லத்தைக் கொண்ட வினாத்தாளையும், நிதி ஒழுங்கு மற்றும் 2006 இல் வெளியிடப்பட்ட அரச விலைமனுக் கோரல் பற்றிய வழிகாட்டி விடயங்களை சோதிக்கும் 2 மணித்தியாலத்தைக் கொண்ட வினாத்தாளையும் கொண்டதாகும்.

இதில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 10% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

* இரண்டாவது தடைதிறன்காண் பரீட்சை, கரையோரம் பேணல் கட்டளைச் சட்டம் மற்றும் அதுசார்ந்த ஒழுங்குவிதிகளின் கீழ் 2 மணித்தியாலத்தைக் கொண்ட வினாத்தாளையும், கரையோர வலய முகாமைத்துவ திட்டம் பற்றிய 2 மணித்தியாலத்தைக் கொண்ட வினாத்தாளையும் கொண்டதாகும்.

இதில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்படும் புதிய அலுவலர் 3 வருட தகுதிகாண் காலத்துக்கு உட்பட வேண்டியதோடு, ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்கள் தெரிவுசெய்யப்படின், அவரது நியமனம் ஒருவருட தகுதிகாண் காலத்துக்கு உட்படுவதோடு, அக்காலப் பகுதியினுள் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமாக இருப்பின் பதவி நிரந்தரமாக்கப்படும்.

(v) இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்ஞான சான்றிதழ் அல்லது பாடசாலைகளுக்கான நியதிக் கோவைகளுக்காக வழங்கப்படும் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ii) கல்விச் சான்றிதழ்

(iii) தொழிற் சான்றிதழ்/பயிற்சி மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்

(iv) விண்ணப்பதாரரின் நற்சான்று மற்றும் இப்பகுதிக்குரிய தகைமைகள் பற்றி அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ்கள் (ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு நற்சான்றிதழ் சமர்ப்பிக்கத் தேவையில்லை).

9. இவ்வர்த்தமானியில் பகுதி I : தொகுதி II (அ) வின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவைகள் பதவிகளுக்கு நியமிப்பது சம்பந்தமாக ஏற்புடையதான நிபந்தனைகளில் அவதானம் செலுத்தப்படும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய,

செயலாளர்,
கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சு.

கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சு,
புதிய செயலகம், மாளிகாவத்தை,
கொழும்பு 10
2009.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சு**

கரையோரம் பேணல் திணைக்களம்

சட்ட அலுவலர் பதவி

(8'' x 13'' அளவுடைய கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி பூரணப்படுத்தவும்.)

| |
|---|
| |

அலுவலக உபயோகத்துக்கு

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :———.
2. முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர் :———.
3. (அ) அலுவலக முகவரி :———.
   (ஆ) தொலைபேசி இல. :———.
4. (அ) சொந்த முகவரி :———.
   (ஆ) தொலைபேசி இல. :———.
5. (அ) நீங்கள் இலங்கைப் பிரசையா ? :———.
   (ஆ) பரம்பரை பிரசையா அல்லது பதிவுவழியா ? :———.
6. (அ) பிறந்த திகதி :
   ஆண்டு :———. மாதம் :———. திகதி :———.
   (ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :———.
7. தேசிய அடையாள அட்டை இல. :———.
8. பால் (ஆண்/பெண்) :———.
9. சமூகநிலை : திருமணமானவர்/திருமணமாகாதவர்/தாரமிழந்தவர்
10. தற்பொழுது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் பதவியொன்றில் ஈடுபட்டிருப்பின் அதுபற்றிய விபரம் :
   (அ) பதவி :———.
   (ஆ) நிரந்தரமானதா/தற்காலிகமானதா ? :———.
   (இ) ஓய்வூதியம் உரித்துடையதா, அற்றதா ? :———.
   (ஈ) பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா ? :———.
   (உ) திணைக்களம் :———.
   (ஊ) தற்பொழுது சேவையாற்றும் இடம் :———.
   (எ) புதிய சம்பள சுற்றறிக்கைக்கு அமைய மாதாந்தச் சம்பளம் : ———.

11. கல்வித் தகைமைகள் :

| பரீட்சை | வருடம் | தோற்றிய பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | |

12. தொழில்/நிபுணத்துவ தகைமைகள் சம்பந்தமான விபரம் :

| சான்றிதழ் | வழங்கிய நிறுவனத்தின் பெயர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | |

13. இதற்கு முன்னர் வகித்த பதவிகள் (முறையாகக் குறிப்பிடுக.) :

| திணைக்களம்/நிறுவனம் | பதவி | இருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |

14. ஏனைய மேலதிக தகைமைகள் :

| திணைக்களம்/நிறுவனம் | கடமை விபரம் | இருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |

15. நீர் யாதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகி உள்ளீரா ? (ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக.) :———.

16. நீர் அரச சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளீரா ? அப்படியானால் அதன் விபரங்களைத் தருக :———.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால் நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யும் தகுதியை இழப்பேன் எனவும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரியவரின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :———.

(இப்பகுதி சேவையில் உள்ளவருக்கு மட்டுமே)

திணைக்கள/நிறுவனத் தலைவரின் விதப்புரை :

(i) இவ்விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/செல்வி ……………………………………… என்பவர் இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் நிரந்தரமாக/ தற்காலிகமாக/ பதிலால் ................................ ஆக சேவையாற்றுபவரான இவரின் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும், அவரது சேவைக்காலத்தினுள் (எச்சரிக்கை தவிர்ந்த) வேறு எவ்வித ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் ஆளாக வில்லை எனவும்,
(ii) மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் சரியானவை என பரீட்சித்துப் பார்த்ததாகவும், அவை சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.
(iii) இவரை இப்பதவிக்குத் தெரிவுசெய்தால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

———,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :———.
பதவி :———.
இடம் :———.
திகதி :———.

6-654

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2009

மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சைக்காக தகைமையுள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 இவ்வறிவித்தலில் "செயலாளர்" என்னும் பதம் அரசாங்க நிருவாக விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரையும் "சேவை" என்னும் பதம் இணைந்த சேவையின் மொழி பெயர்ப்பாளர் சேவையையும் குறிக்கும்.

1.2 இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இப்பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு. பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும், நியமனம் நடைமுறைப்படும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையும் நிரப்பாது இருக்கும் அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு. தேசிய அவசியத்தின் பொருட்டு அந்தந்த மொழி மூலங்களில் நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

**2. ஆட்சேர்க்கப்படும் மொழி மூலங்கள் பின்வருமாறு :**

(1) சிங்களம்/தமிழ்-தமிழ்/சிங்களம்
(2) சிங்களம்/ஆங்கிலம்-ஆங்கிலம்/சிங்களம்
(3) தமிழ்/ஆங்கிலம்-ஆங்கிலம்/தமிழ்

**3. அமைப்பும் வேதன அளவுத் திட்டமும்.**- 2007.08.24 ஆந் திகதிய 6/2006 (iv) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மொழிபெயர்ப்பாளர்கள் சேவையில் வகுப்பு I இன் சம்பள குறியீட்டு இலக்கம் MN 6-2006 A ஆவதுடன் மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு I இன் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 21,245-10X365-15X450-ரூபா 31,645 ஆகும். முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 4 ஆம் சம்பள படிநிலையை அடைவதற்கு முன்னர் சித்தி அடைதல் வேண்டும்.

45 ஆவது வயது பூர்த்தியானதன் பேரில் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் விலக்களிக்கப்பட மாட்டாது. (2001.09.12 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 20/2001 இன்படி)

**4. சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவை நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளின் பேரிலும் 1994.07.26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் பேரிலும், பிரமாணக் குறிப்பில் செய்யப்பெற்ற அல்லது இனிமேல் செய்யப்படவுள்ள எவையேனும் திருத்தங்களுக்கு அமைய தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I க்கு நியமிக்கப்படுவர்.

5. தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் கடமையை ஏற்றுக்கொள்வதற்கு முன் அரசாங்க வைத்தியர் ஒருவரைக் கொண்டு மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ளுதல் வேண்டும். பரீட்சார்த்தி இத்தீவின் எப்பகுதியிலாயினும் பணியாற்றக்கூடிய உடல் நலம் அற்றவரென சிபாரிசு செய்யப்படுமாயின் இந்நியமனம் வலுப்பெறாது.

**6. தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது அதையொத்த பரீட்சையொன்றில் முதலாம் மொழிக்கு திறமைச் சித்தியொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது அதையொத்த பரீட்சையொன்றில் இரண்டாம் மொழிக்கு திறமைச்சித்தியொன்றை பெற்றிருத்தல் அல்லது இரண்டாம் மொழி தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய அதைவிட உயர் தகைமையொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(iii) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

அல்லது

(ஆ) சட்டத்தரணிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியொன்றில் அல்லது பல்துறைத் தொழில்நுட்ப நிறுவனமொன்றில் வர்த்தகவியல் டிப்ளோமா சான்றிதழை பெற்றிருத்தல்

அல்லது

(ஈ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் தொடர்பான தேசிய டிப்ளோமா உயர் சான்றிதழை பெற்றிருத்தல்

அல்லது

(உ) மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** 1.- மேற்படி பட்டங்கள் அல்லது சான்றிதழ்கள் 2009.06.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியிலிருந்து செல்லுபடியாகுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அமையும் மாதத்திற்கு உடன் முன்னரான மாதத்தில் இறுதித் திகதியாகும் திகதிக்கு அதாவது, 2009.06.30 ஆந் திகதிக்கு 21 வயதை அடைந்துள்ளதும் 40 ஐ அடையாதவருமான நபரொருவருக்கு (அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர உத்தியோகத்தர்கள் தொடர்பில் மேற்படி வயதெல்லை ஏற்புடையதாகாது.) திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதியுண்டு.

**குறிப்பு** 2.- சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழி பாடங்களில் 2 ஐப் பல்கலைக்கழக பட்டம் பெறும்போது சித்தியடைந்திருக்குமிடத்து அத்தகைய தகைமையுடைய ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால் அவர் ஏற்புடைய சம்பள அளவு திட்டத்தில் தொடக்க சம்பளத்தை பார்க்க இரண்டு சம்பள படிநிலையில் கூட்டி வைக்கப் படுவார்.

7. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்கான கட்டணம் ரூபா 300 ஆகும். இக்கட்டணம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக எந்தவொரு மாவட்ட/ பிரதேச செயலகமொன்றுக்கு செலுத்தப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 4000-20-03-20-13 என்பதில் வரவுவைக்கப்படல் வேண்டும். அப்பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டப்படுதல் வேண்டும். இக்கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தாம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

8. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பதாரர் ஏ-4 அளவினதாய் ஒரு முழுத்தாளில் இரு பக்கங்களையும் உபயோகித்து இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்திற்கமைய தயாரித்த விண்ணப்பத்தை தானே நிரப்ப வேண்டும். 1 முதல் 7 வரை விண்ணப்பப்படிவத்தின் முதலாம் பக்கத்திலும் 8 முதல் 11 வரை அதன் மறுபக்கத்திலும் 12 மற்றும் 13 வரை மூன்றாம் பக்கத்திலும் இடம்பெறும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விசேடமாகக் கவனிக்கவும்.

(ஆ) பரீட்சார்த்தி எம்மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகின்றாரோ அம்மொழியில் விண்ணப்பம் அமைதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 2,30,700 ரூபாவுக்கு மேலான வருடாந்த வேதனத்தையுடைய அரசாங்கத்தின் நிரந்தர பதவியைக் கொண்ட உத்தியோகத்தரொருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) இப்பரீட்சைக்காக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பத்தரமுல்லை, பெலவத்தை" என்னும் முகவரியிடப்பட்டு 2009.07.27 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் அவரைச் சென்றடையுமாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். அதன்பின் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2009" எனத் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(உ) தற்போது அரச திணைக்களங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். எவரேனுமொரு விண்ணப்பதாரர் அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறுமிடத்து அவர் தகுதியற்றவரெனக் கருதப்படுவார். 2009.07.27 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக தமது விண்ணப்பங்களை காலதாமதமின்றி திணைக்களத் தலைவர்களிடம் கையளிக்குமாறு விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுகிறார்கள்.

(ஊ) எல்லா வகையிலும் பூர்த்திசெய்யப்படாத எந்த விண்ணப்பமும் அறிவிக்கப்படாது நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டது, தாமதிக்கப்பட்டுவிட்டது என்ற முறைப்பாடுகள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது.

(எ) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட மாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டதும் அதுபற்றி செய்திப்பத்திரிகைகளில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை பத்திரிகைகளில் பார்த்திருக்கும்படி விண்ணப்பதாரிகள் வேண்டப் படுகின்றார்கள். பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னரேனும் தமது அனுமதி அட்டையை விண்ணப்பதாரி ஒருவர் பெறாவிடின் அவர் உடனே "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பத்தரமுல்லை" (தந்தி முகவரி : "பரீட்சை" கொழும்பு) என்ற முகவரிக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்துடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும் :

(i) பரீட்சையின் பெயர் :----.

(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.

(iii) முகவரி :----.

(iv) விண்ணப்பம் தபாலில் இடப்பட்ட திகதியும், பதிவு இலக்கமும் தபால் நிலையமும் :----.

(v) பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கமும் மாவட்ட/ பிரதேச செயலகமும் திகதியும் :----.

9. ***பரீட்சைக்கு அனுமதி***.- (அ) இதில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிப்பார்கள் என்ற கருதுகோளின்படி, விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதிப்பத்திரங்களை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளருக்கு அனுமதிப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். தனது அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தான் பரீட்சைக்குத் தோற்றும் மண்டபத்துக்குச் செல்லும் முதல் நாளிலேயே அந்த மண்டபத்துக்குரிய அனுமதி அட்டையை அம்மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குவிதிகளின் தொகுதியொன்று இவ்வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

***குறிப்பு***.- பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்குவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதகமாகக் கொள்ள வியலாது.

10. ***பரீட்சார்த்தியின் அடையாளம்***.- பரீட்சார்த்தி தான் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். இதன் பொருட்டு பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு

11. **பொய்யான தகவல்களுக்குத் தண்டனை**.- பரீட்சார்த்தி யொருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் பரீட்சார்த்த உரிமை இப்பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது அதற்குப் பின்னரோ எக்கட்டத்திலும் நிராகரிக்கப்படலாம். ஒரு பரீட்சார்த்தி அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டியளவில் பொய்யானவை எனக் காணப்படின் அல்லது அவர் உண்மை எதனையும் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

12. ***பரீட்சை முறை***.- இப்பரீட்சையானது எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளாக நடாத்தப்படும் :

12.1 ***எழுத்துமூலப் பரீட்சை***.- இதற்கான வினாத்தாள் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :

(அ) மொழிபெயர்ப்பு (3 மணித்தியால வினாத்தாள்) — 100 புள்ளிகள்
(ஆ) ஆங்கில மொழி (1 1/2 மணித்தியால வினாத்தாள்) — 100 புள்ளிகள்
(இ) சிங்கள மொழி (1 1/2 மணித்தியால வினாத்தாள்) — 100 புள்ளிகள்
(ஈ) தமிழ்மொழி (1 1/2 மணித்தியால வினாத்தாள்) — 100 புள்ளிகள்
(உ) கிரகித்தல் (1 1/2 மணித்தியால வினாத்தாள்) — 100 புள்ளிகள்

12.1.1 ***பாடத்திட்டம் :***

(1) மொழிபெயர்ப்பு.- அலுவலக ஆவணம் அல்லது அறிக்கை அல்லது செய்திப்பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை ஒன்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள் உட்பட உத்தியோகபூர்வமான விஞ்ஞான, சட்டத்துறை சார்ந்த தொழில்நுட்ப விடயங்கள் சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் இலக்கிய நூல்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை கீழ்வரும் முறைகள் அதாவது (i) அல்லது (ii) அல்லது (iii) ஆகிய ஏதேனும் ஒன்றிற்கு இணங்க மொழிபெயர்த்தல் :

(i) சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கும் தமிழ் மொழியிலிருந்து சிங்களத்துக்கும்
(ii) சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும் ஆங்கில மொழியிலிருந்து சிங்களத்துக்கும்
(iii) தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும் ஆங்கில மொழியிலிருந்து தமிழுக்கும் (மொழிபெயர்க்கும் போது உயர் திறமை எதிர்பார்க்கப்படுகின்றது.)

***குறிப்பு***.- *ஆங்கில/சிங்கள/தமிழ் மொழி வினாத் தாள்கள்*.- இதன் பொருட்டு மும்மொழிகளிலும் வினாத் தாள்கள் தயார் செய்யப்படுவதுடன் அவற்றில் தனக்குரித் தான இரண்டு மொழி வினாத்தாள்களுக்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும்.

(2) *ஆங்கில மொழி*.- ஒரு கட்டுரை எழுதும்படியும், ஒரு பகுதியை சுருக்கியெழுதும்படியும், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழிநடையில் எழுதும்படியும் சொற்களில் கருத்துத் தெளிவாகும் வகையில் அச்சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்கும்படியும், வாக்கியங்களில் உள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்தும்படியும், மரபு சொற்றொடர்களின் கருத்தை விளக்கும்படியும் பரீட்சார்த்தி கேட்கப்படுவார்.

(3) *சிங்கள மொழி*.- ஒரு கட்டுரை எழுதும்படியும், ஒரு பகுதியை சுருக்கி எழுதும்படியும், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழிநடையில் எழுதும்படியும், சொற்களின் கருத்துத் தெளிவாகும் வகையில் அச்சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்கும்படியும், வாக்கியங்களில் உள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்தும்படியும், மரபுச் சொற்றொடர்களின் கருத்தை விளக்கும்படியும் பரீட்சார்த்தி கேட்கப்படுவார்.

(4) *தமிழ்மொழி*.- ஒரு கட்டுரை எழுதும்படியும், ஒரு பகுதியைச் சுருக்கி எழுதும்படியும், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழிநடையில் எழுதும்படியும், சொற்களின் கருத்து தெளிவாகும் வகையில் அச்சொற்களைக் கொண்டு வாக்கியங்களை அமைக்கும்படியும், இலக்கணப் பிழைகளைத் திருத்தும்படியும் மரபுச் சொற்றொடர்களின் கருத்தை விளக்கும்படியும் பரீட்சார்த்தி கேட்கப்படுவார்.

(5) *கிரகித்தல்*.- சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயார் செய்யப்படும் கிரகித்தல் வினாப்பத்திரத்தின் பொருட்டு தாம் விரும்பும் ஒரு மொழியில் விடையளிக்க பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படும்.

இதன் பொருட்டு பகுதிகளின் தொகுப்பொன்று பரீட்சார்த்திக்கு கொடுக்கப்படும். சில பகுதிகள் சம்பந்தப்பட்ட வரையில் பரீட்சார்த்திக்கு மாற்றுக் கூற்றுக்களின் தொகுதியொன்று கொடுக்கப்படும். இவற்றுள் ஒன்று பகுதியின் உள்ளடக்கத்துடன் நன்கு பொருந்துவதாக இருக்கும். பொருத்தமான கூற்றைத் தேர்ந்தெடுக்கும்படி பரீட்சார்த்தி கேட்கப்படுவார். ஏனைய பகுதிகளைப் பற்றிய வகையில் பரீட்சார்த்தி பகுதியின் அர்த்தத்தை எவ்வளவு

தூரம் விளங்கிக்கொள்கின்றார் என்பதை பரீட்சிப்பதற்கு ஏற்ப வினாக்கள் தயாரிக்கப்படும்.

**குறிப்பு**.- தெளிவற்ற கையெழுத்துக்களுக்கும் சொற்பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாத எழுத்துக்களை எழுதும் பரீட்சார்த்தியொருவரின் தகைமை இரத்துச் செய்யப்படலாம்.

12.1.2 ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுக்கிடையில் குறித்த புள்ளிகளின் திறமை ஒழுங்கின்பேரில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கேற்ப நியமனங்கள் வழங்கப்படும்.

12.2 **நேர்முகப் பரீட்சை**.- தகைமைச் சான்றிதழ்களையும் தேகாரோக்கிய நிலையையும் பரிசோதிப்பதற்காக மட்டும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இதன் பொருட்டு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

13. பரீட்சார்த்திகள் அனைவரும் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்வதற்கு முன்பாக வர்த்தமானி அறிவித்தலை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். உரிய குறியீடுகள் சரியாக குறிக்கப்பட வேண்டும் என்பதுடன் தவறுதல்களையும் பிழைகளையும் திருத்துவதற்குச் செய்யப்படும் வேண்டுதல்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவத்தினதும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதிகளை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாக இருக்கும்.

14. இவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய,

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2009, யூன் 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மொழிபெயர்ப்புச் சேவையில் வகுப்பு I இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2009**

Open Competitive Examination for Recruitment to Class I of the Translator's Service – 2009

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) உதாரணம் : SILVA A.B.
திரு./திருமதி/செல்வி :———.
(ii) முழுப்பெயர்
(i) ஆங்கிலத்தில் :———.
(ii) சிங்களத்தில்/தமிழில் :———.
(iii) அடையாள அட்டை இலக்கம் :

2. (i) அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :———.
(ii) அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :———.
(iii) அலுவலக முகவரி :———.

3. (i) பால் : பெண்-1, ஆண்-0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)
(ii) நீர் இலங்கைப் பிரசையா ? :———.
(iii) இனத்தொகுதி :–

சிங்களவர் - 01
இலங்கைத் தமிழர் - 02
இந்தியத் தமிழர் - 03
முஸ்லிம் - 04
ஏனையோர் - 05

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. நீர் பரீட்சைக்குத் தோற்றுவது மொழிபெயர்ப்பாளர் சேவையில் எந்தப் பதவிக்கு என்பதைப் பற்றி பின்குறிப்பிடவும் :–
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

(1) சிங்களம்/தமிழ்-மொழிபெயர்ப்பாளர் - 01
(2) சிங்களம்/ஆங்கிலம்-மொழிபெயர்ப்பாளர் - 02
(3) தமிழ்/ஆங்கிலம்-மொழிபெயர்ப்பாளர் - 03

5. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம்/தமிழ் - 1
சிங்களம்/ஆங்கிலம் - 2
தமிழ்/ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

6. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :———.

திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

7. (i) பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

(ii) 2009.06.30 ஆந் திகதிக்கு வயது-

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

8. வர்த்தமானி அறிவித்தலில் 6.0 ஆம் பந்தியின் பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக நீர் பெற்றுள்ள கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :———.

(அ) (i) பட்டத்தின் அல்லது தகுதிச் சான்றிதழின் பெயர் :———.
(ii) அச்சான்றிதழ் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் : ———.
(iii) பட்டம் அல்லது மற்றைய சான்றிதழ்கள் வலுப்பெறும் திகதி :———.

(iv) பட்டம்பெற்ற மொழிமூலம் :———.
(v) பட்டத்தின்போது சித்தியெய்திய ஏனைய மொழிகள் :

(1) :———.
(2) :———.

(ஆ) (1) முதலாம் மொழியில் திறமைச் சித்தியெய்திய க.பொ.த.(சா.த.) பரீட்சை அல்லது அதையொத்த பரீட்சை :———.
ஆண்டு :———.

(2) இரண்டாம் மொழியில் திறமைச் சித்தியெய்திய க.பொ.த.(சா.த.) பரீட்சை அல்லது அதையொத்த தகைமைகளைக் கொண்ட பரீட்சை :———.
ஆண்டு :———.

9. நீர் தற்போது அரசாங்க சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கிறீரா ?
(ஆம்/இல்லை) :———.
பதவியின் பெயர் :———.
நியமிக்கப்பட்ட திகதி :———.
தற்போது சேவையாற்றும் நிறுவனம் :———.

10. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டிவிடவும்.

| |
|---|
| |

11. இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .......................... ஆம் இலக்க ............................................. ஆந் திகதிய பணப்பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது எனவும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நடந்துகொள்ளவும், இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவர் எனக் காணப்படின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்வதற்காக எடுக்கப்படும் தீர்மானத்துக்கு நான் உடன்படுகின்றேன் எனவும்,

மேலும் இவ்விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்வதற்குமுன் வர்த்தமானி அறிவித்தலை நன்கு வாசித்து அறிந்துகொண்டேன் என்றும், குறியீட்டு இலக்கங்கள் மற்றும் தரப்பட்ட விபரங்களில் தற்செயலாக பிழைகள் அல்லது மாற்றங்கள் ஏற்பட்டிருப்பின் அதற்குரிய விளைவுகளுக்கு நானே பொறுப்பாளி என்றும், அது சம்பந்தமாக மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க மாட்டேன் என்றும்

உறுதிகூறுகின்றேன்.

———,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :———.

12. **பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

*..................................................................................... இல் வசிக்கும் திரு./திருமதி/செல்வி ....................................... என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் 2009 ஆம் ஆண்டு ...................... மாதம் .......................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிபடுத்துகின்றேன்.

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் :———.
பெயரும் நிலையும் :———.
முகவரி :———.
(பதவி முத்திரை)
திகதி :———.

**குறிப்பு***.- தற்போது அரச சேவையில் உள்ளவர்களின் கையொப்பத்தை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவராலோ அல்லது அவருக்குப் பதிலாக சேவையாற்றும் உத்தியோகத்தர் ஒருவராலோ சான்றுபடுத்தப்பட வேண்டும்.

13. ***திணைக்களத் தலைவரின் சான்றுரை***.- இப்பரீட்சார்த்தி இதன் 07, 08 மற்றும் 09 ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், அவரின் வேலையும் நடத்தையும் திருப்திகரமானதென்றும் வர்த்தமானப் பத்திரிகையின்படி, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்திசெய்திருக்கிறார் என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன். தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்.

———,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவி :———.
திகதி :———.

6-507